1978 மார்ச் 31]

திரு. சொ. ந. பழனிச்சாமி: அவிநாசி பேரூராட்சியை நகராட்சியாக உயர்த்தினல் அங்குள்ள மக்களுக்கு மருத்துவ வசதி, மற்றும் தண்ணீர் வசதி முதலியவை ஏற்படும் என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இதை நகராட்சியாக மாற்ற அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இதற்கு முறைப்படி வர வேண்டிய வருவாய், மக்கள்தொகை இவற்றையெல்லாம் கணக்கிட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் பரிந்துரையை அரசுக்கு அனுப்பி வைத்தால் அதை ஆய்வு செய்யலாம்.

முன்னுள் திருவிதாங்கூர் — கொச்சியிலிருந்து மாற்றல் பெற்ற பணியாளர்கள்

* 744 வினு—திரு. தே. ஞானசிகாமணி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) States Re-organisation காரணமாக திருவிதாங்கூர்-கொச்சி அரசிலிருந்து தமிழ்நாடு அரசுக்கு மாற்றப்பட்ட குழித்துறை நகரமன்ற ஊழியர்கள் G. O. Ms. No. 103, R. D. & L. A., dated 29-1-75ஞல் பென்ஷன் கிராஜுட்டி ஆகியவைகளில் பாதிக்கப்பட்டு உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அப்படியானல், மேற்படி G. O. வை மறுபரிசீலனை செய்ய உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. காளிமுத்து (அ) மற்றும் (ஆ) பல்வேறு நிலைமைகளையும் நன்கு ஆராய்ந்த பின்னரே அரசு முடிவெடுத்தது. இதை மறுபரிசீலனை செய்யும் அவசியம் இல்லை.

திரு. தே. ஞானசிகாமணி: தலைவர் அவர்களே, குமரி மாவட்டம், திருவிதாங்கூர்-கொச்சியோடு இருந்த நேரத்தில் வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களுக்கு இருந்த இந்தச் சலுகை தமிழகத்தில் சேர்ந்ததற்குப்பின்னல் மறுக்கப்படுகிறது. கேரளத்தில்இவர்களுக்கு கிராஜுயுட்டி, பென்ஷன் முதலியவை கொடுக்கப்படுகிறது. ஆகவே இதை மீண்டும் பரிசீலனை செய்து நல்ல முடிவுகளை எடுக்க அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து; இதில், மொத்தத்தில் 12 பேர்கள் சம்பந்தப்பட்ட பிரச்னை இது. இதைத் திட்டவட்டமாக ஆராய்ந்து ஆணை பிறப்பிக்கப்பட்டது, இன்னும் மறுபரிசீலனை

செய்ய ஆரம்பித்தால் வேறு பல புதிய பிரச்னைகள் பிறக்கும், ஆகவே, இதை மறுபரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று அரசு முடிவு செய்துள்ளது.

திரு. ஜே. ஜேம்ஸ் : ஸ்டேட் ரீ-ஆர்கனைஸேஷன் ஆக்டின் படி திருவிதாங்கூர்-கொச்சி ஸ்டேட்டில் பணிசெய்தவர்கள் தமிழ் நாட்டுக்கு மாற்றப்பட்டிருப்பார்களேயானால், ஏற்கனவே அவர்கள் என்னென்ன நன்மைகளைப் பெற்றுக்கொண்டு இருந்தார்களோ, அல்லது அவர்கள் அங்கேயே தொடர்ந்து இருந்தால் அவர்களுக்கு என்ன நன்மை கிடைத்திருக்க முடியுமோ அவை கொடுக்கப்படும், அவர்கள் பாதிக்கப்படக்கூடாது என்ற அஷ்யூரன்ஸ் அந்தச் சட்டத்தில் இருக்கிறது. ஆக, இந்த புதிதாக தமிழ்நாடு ஸ்டேட் ஜி.ஒ. வந்ததால் அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொன்னால் அந்த ஜி.ஒ. வை மாற்றி அமைக்க வேண்டிய நிர்ப்பந்தம் வருகிறது. கோர்ட்டுக்குப் போனால் இந்த ஜி.ஒ. நிற்காது. ஆகவே இந்த ஜி.ஒ. வை மாற்றி அமைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த ஜி.ஒ.வைத் தவறாகப்புரிந்து கொண்டிருக்கிறார்கள். திருவிதாங்கூர் — கொச்சியில் அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய ஊதியத்தை எல்லாம் பரிசிலித்து, அதை வழங்குகின்ற முறையில் தான் இப்போதும் வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் மினி பஸ் போக்குவரத்து.

* 745 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

> தஞ்சை மாவட்டத்தில் சோழன் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் மினி பஸ்களை போக்குவரத்துக்குப் பயன்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தற்சமயம் இல்லை.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலுள்ள சாலைகள் எல்லாம் மிகவும் குறுகலான சாலைகளாக இருக்கின்ற காரணத்தினால் பெரிய பேருந்துகள் செல்ல முடிவதில்லை. ஆகவே மினி பேருந்துகளை விட்டால் மக்களுக்கு நன்மையாக இருக்கும் என்பதை மனதிற்கொண்டு. தஞ்சை மாவட்டத்தில் அதிகமான மினி பேருந்துகளை விடுவதற்கு ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.